**ஏப்ரல் – 25**

**"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." - எபி 11 : 6**

"உங்கள் விசுவாசத்தின் படி உங்ககளுக்கு ஆகக்கடவது." இதுதான் கர்த்தருடைய சீஷர்களாயிருக்கும் எல்லோரையும் அவர்களுடைய கிறிஸ்தவ நடையிலும், அனுபவத்திலும் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் அவர் நடத்துகிற விதமாகத் தோன்றும். அவர் நம்மைக் கவனியாதது போலத் தோன்றும் போது, விசுவாசம், நம்முடைய ஆவிக்குரிய காரியங்களும், உலகம் சம்பந்தமான காரியங்களும், ஜெயமாகச் சென்று கொண்டிருப்பதாகத் தோன்றும் போதும், விசுவாசம், காலப்போக்குகளும், சக்திகளும் எல்லாம் நமக்கு எதிராக இருப்பதாகத் தோன்றும் போதும், சமமாக திடமான விசுவாசம் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். அந்த விசுவாசம் எல்லா நிலைமைகளிலும் அவருடைய நன்மையிலும், உண்மையிலும் பூர்த்தியான நம்பிக்கையோடு கர்த்தரை நோக்கிப் பார்க்கக் கூடியதாகவும், நாம் அவருடைய ஜங்களாயிருக்கிறதினாலே, அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே இறுதியான நமக்கு எல்லாம் நமது நன்மைக்கென்றே நடக்கிறது என்று தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. **-Z ’00, 139 (R 2625).**

அன்பைத் தவிர தேவனுடைய பார்வையில், விசுவாசத்தை விட அதிகமாக பிரியமாயிருக்கிற காரியம் ஒன்றுமில்லை. ஆகையால், யார் தன்னுடைய குணத்தில் நம்பிக்கை வைத்து அப்பியாசிக்கிறார்களோ, அவர்களிடத்தில் பரமபிதா பிரியமாயிருக்கிறார். அப்படியே அவருடைய குணத்தில் அவநம்பிக்கை வைத்து அதனாலே அவருடைய ஞானம், நீதி, அன்பு, வல்லமை இவைகளைப்பற்றி குற்றஞ் சொல்லுகிறவர்கள், தேவனுக்குப் பிரியமில்லாதவர்களாய்த்தான் இருக்க முடியும். ஆகையால், தேவனால் அங்கீகரிக்கத் தகாதவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" ஆகையால், தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருப்போமாக. **-P ’35, 62.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

எபி 11; அப் 14:15; ரோம 4:11,12,16,18,19; 1தெச 1:9; 1தீமோ 4:10; 1யோவா 5:4; யோவா 3:15-18,36; ஆதி 15:1; மத் 5:12; 6:1,2,5,16; 10:41,42;6:33; எரே 29:13; 2பேது 1:5,10; 3:14.

**கோபுர வாசிப்பு : Z ’15, 197 (R 5716).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின்படி இவ்வாரத்தில் என்னுடைய அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? எவ்விதமான பலன்களைக் கொண்டு வந்தன?